செய்தி வெளியீடு எண்: 631 நாள்:29.08.2020

**<u>இன்று (29.08.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் சென்னை, தலைமைச் செயலகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலமாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் முடிவில் ஆற்றிய உரை:</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்புப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், அரசு மற்றும் மாவட்ட நிர்வாகம் எடுத்த நடவடிக்கைகளினால் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டு சுமார் 5 மாத காலத்தில் நோய்ப் பரவல் கட்டுக்குள் இருக்கின்றது. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தில் நோய்ப் பரவல் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த நோயை குணப்படுத்த இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படாத சூழ்நிலையில் மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை, வருவாய்த் துறை மற்றும் பிற துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து சிறப்பாகப் பணியாற்றியதால் நோய் படிப்படியாக குறைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளித்ததால் குணமடைந்தோர் எண்ணிக்கை உயர்ந்து, இறப்பு சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

அதோடு, நாளொன்றுக்கு 75 ஆயிரம் RTPCR பரிசோதனை மேற்கொள்வதால் நோய் அறிகுறிகள் தென்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்த்து குணப்படுத்தியதால் தமிழகத்தில் நோய்ப் பரவல் குறைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கினால்தான் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுக்க முடியும், அதுதான்

இதற்கு மருந்து. பொதுமக்கள் கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும், வெளியில் செல்லும்போது சமூக இடைவெளியை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும், வெளியில் சென்று வீடு திரும்பும்போது கைகளை சுத்தமாக சோப்பு போட்டுக் கழுவ வேண்டும், வீட்டிலிருக்கின்ற கழிவறைகளை அடிக்கடி கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும், வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல், தங்கள் வீதிகளை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். பொதுக் கழிப்பறை இருந்தால் அடிக்கடி கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். இதை அனைவரும் கடைபிடித்தால் தமிழகத்தில் நோய்ப் பரவலை தடுக்க முடியும், இயல்பு நிலைக்குத் திரும்பமுடியும்.

வேளாண் பணிகளைப் பொறுத்தவரை 100 சதவிகிதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை 100 சதவிகிதப் பணியாளர்களை வைத்து இயங்கலாம் என அரசு அனுமதி வழங்கி, தற்போது சுமார் 75 சதவிகிதப் பணியாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. குடிமராமத்துத் திட்டம், தூர்வாரும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவதால் பருவ காலங்களில் பொழியும் மழை நீர் முழுவதும் சேமிக்கப்பட்டு, வேளாண் பணிக்கும், குடிப்பதற்குமான நீர் ஆதாரத்தை அம்மா அரசு உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கொரோனா காலத்திலும், மாண்புமிகு அம்மா அரசின் கடும் முயற்சிகளின் காரணமாக அதிக முதலீட்டை ஈர்த்து, சுமார் 42 தொழில்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில்தான் பெரும்பாலும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதேபோல, இந்திய அளவில் GDP 4% உள்ளது. ஆனால், தமிழகத்தில் GDP 8%ஆக உள்ளது.

மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் கடைமடைப் பகுதி வரை குறிப்பிட்ட காலத்தில் சென்றடைந்ததால் குறுவை சாகுபடி பரப்பு **3.50** இலட்சம் ஏக்கர் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், **4.11** இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல, மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வேளாண் தொழில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. வேளாண் பெருமக்களுக்கு இடுபொருள், விதை நெல் உரிய காலத்தில் கிடைத்ததாலும், தண்ணீர் குறிப்பிட்ட நேரத்தில் முழுமையாகச் சென்றடைந்ததாலும், தமிழகத்தில் அதிக விளைச்சல் பெற்று, இதுவரை அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் ஆண்டொன்றுக்கு **23** இலட்சம் மெட்ரிக் டன் செய்யப்பட்டு வந்த நெல் கொள்முதல் இந்த வருடம் **30** இலட்சம் மெட்ரிக் டன்னாக கொள்முதல் செய்யப்பட்டு, ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

தொழில் வளம், வேளாண்மை சிறக்க முழு கவனம் செலுத்துகின்ற அரசு அம்மாவின் அரசு என்பதை தெரிவிக்க விரும்புகிறேன். வடகிழக்கு பருவமழை காலமாதலால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை செயல்படுத்த வேண்டும். குறிப்பாக, தண்ணீர் தேங்கினால் டெங்கு காய்ச்சல் ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் எங்கும் தண்ணீர் தேங்காமல் கவனமாக பார்த்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு நல்ல உணவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், தரமான, சத்தான, ருசியான உணவை அளிக்க வேண்டும், அதை அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சுகாதாரத் துறையும் ஆய்வு செய்ய வேண்டும்.

நகரப் பகுதிகள், பேரூராட்சி, நகராட்சி பகுதிகளில் குப்பைகள் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மழைகாலமாக இருக்கின்ற காரணத்தால், குப்பைகளிலிருந்து கிருமி உற்பத்தியாகி தொற்று ஏற்பட்டு விடும். அதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கொரோனா நோய்த் தொற்று அதிகமாக இருக்கும் பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிக அளவில் பரிசோதனை செய்வதன் மூலம் நோய்ப் பரவலைத் தடுக்க முடியும். கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்ட இந்த ஐந்து மாத காலத்தில், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் திறமையான முறையில் பணியாற்றிய காரணத்தினால், தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் படிப்படியாக குறைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை தெரிவித்து, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்த நேரத்தில் பாராட்டுக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதேபோல, மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெறுபவர்களுக்கு அர்ப்பணிப்பு உணர்வோடு நல்ல முறையில் சிகிச்சை அளிக்கும் நம்முடைய மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கொரோனா வைரஸ் தடுப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித்

தலைவர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி தங்கள் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவலைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டு உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**